காணொலிக் காட்சி வாயிலாக

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்

## பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் இன்று (05.08.2023 - சனிக்கிழமை) காலை 10.30 மணி அளவில், காணொலிக் காட்சி வாயிலாக நடைபெறுகிறது. அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்: தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா.**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை -600 018
நாள்- 3.8.2023

**துரைமுருகன்,**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

தமிழ்நாட்டில்

# வெயில் அதிகரிக்கும்!


சென்னை,ஆக.4-

தமிழகத்தில் வெயில் அதிகரிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இயல்பிலிருந்து 2 3 டிகிரி செல்சியஸ் அதிகமான இருக்கக்கூடும். அதிக வெப்பநிலை மற்றும் அதிக ஈரப்பதம் இருக்கும் பொழுது வெப்ப அழுத்தம் காரணமாக அசௌகரியம் ஏற்படலாம்.

# புதுச்சேரி முதல்வர் என்.ரங்கசாமி பிறந்தநாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, ஆக,5-

புதுச்சேரி முதலமைச்சர் என்.ரங்கசாமி அவர்களின் பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**புதுச்சேரி முதலமைச்சர் என்.ரங்கசாமி அவர்களது பிறந்தநாளில் அவர் என்றும் மகிழ்ச்சியுடனும் நல்ல உடல்நலத்துடனும் திகழ எனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை கடற்படை தாக்குதலால் படகுகள் சேதமடைந்து வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட

# மீனவர் நலனுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன..?

## மக்களவையில் ஆ.ராசா கேள்வி!



புதுடெல்லி, ஆக.5 -

கடலில் மீன்பிடிக்கச் செல்லும் அப்பாவி தமிழ்நாட்டு மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்துவதும், கைதிகளாக பிடித்துச்செல்வதுமான சம்பவங்களால் மீனவர் குடும்பங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு தவிப்பதை தடுக்க ஒன்றிய அரசு மேற்கொண்ட ராஜாங்க நடவடிக்கைகள் என்ன என்று நாடாளுமன்ற மக்களவையில் ஆ. ராசா கேள்வி எழுப்பினார்.

அது குறித்த விபரம் வருமாறு :

(அ) தமிழ்நாட்டு மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் மேற்கொள்ளும் தாக்குதல் நடவடிக்கைகள் அதிகரித்து வரும் நிலையில் இப்பிரச்சினையைச் சமாளிக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன ?

(ஆ) படகுகள் சேதமடைந்த மீனவர்களுக்கு இழப்பீடு வழங்குவது குறித்து பரிசீலிக்கப்பட்டுள்ளதா, அப்படி யானால் அதன் விவரங்கள் என்ன ?

(இ) தொடர்ந்து வரும் இந்தப் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காண, அவற்றை விவாதித்து முடிவு எட்டப்படும் வகையில் மீன்வளத்துறையினரின் கூட்டுப் பணிக்குழுக் கூட்டம் கூட்டப்பட்டதா?

(ஈ) அப்படியானால் அதன் விவரங்கள், இல்லையென்றால் அதற்கான காரணம் என்ன?

மேற்கண்ட கேள்விகளுக்கு ஒன்றிய அரசின் வெளிவிவகாரத்துறை இணையமைச்சர் வி. முரளிதரன் எழுத்துப்பூர்வமாக அளித்த பதில் வருமாறு :

(அ) முதல் (ஈ) வரை : இந்திய மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்கு இந்திய அரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. இந்திய பிரதமர், இலங்கை பிரதமருடனான உயர்மட்ட சந்திப்புகளில் மீனவர் பிரச்சினை பற்றி எடுத்துச் சொல்லியுள்ளார். மீனவர்கள் பிரச்சினையை முற்றிலும் மனிதாபிமான மற்றும் வாழ்வாதார பிரச்சினையாக கருதுமாறு இலங்கை அரசிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், எந்த சூழ்நிலையிலும் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருக்க இரு தரப்பினரும் உறுதியளிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மீனவர்கள் பிரச்சினைகள் தொடர்பாக மீன்வளத்துறையினரின் கூட்டுப் பணிக்குழுக் கூட்டங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. இரு தரப்பினருக்கும் இடையில் 2022 மார்ச் மாதம் மீன்வளம் தொடர்பான கூட்டுப்பணிக்குழுக் கூட்டம் (JWG) நடைபெற்றது. இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு கலந்தாலோசனை நிகழ்ச்சி நிரலுக்கேற்ப மீனவர்கள் மற்றும் மீன்பிடி படகுகள் தொடர்பான பிரச்சினை உட்பட மீன்பிடித்தலில் உள்ள அனைத்து பிரச்சினைகள் குறித்தும் கூட்டு பணிக்குழு விரிவாக விவாதித்துள்ளது.



தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ப.ஆனந்தன் ஏற்பாட்டில் கடத்தூரில் கலைஞர் நூற்றாண்டுவிழா கோப்பை 2023 இறுதி கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர். பி.பழனியப்பன், அணியின் துணைச் செயலாளர் நிவேதா ஜெஷிகா ஆகியோர் முதலிடம் பெற்ற தருமபுரி அப்துல் கலாம் கிரிக்கெட் கிளப் அணிக்கு ரூ.1,00,000 ரொக்க பணம் மற்றும் கோப்பையை வழங்கினார்கள். ரூ.2,20,000/ மதிப்புள்ள ரொக்க தொகை முதல், இரண்டாம், மூன்றாம் பரிசு மற்றும் ஆறுதல் பரிசுகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் துணை அமைப்பாளர்கள் பாம்பே சக்தி,ச.பாலாஜி,ஜெ.சசிக்குமார்,சே.சதிஸ், ச.செந்தமிழ்,மு.தினேஷ்கார்த்திக் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 5ஆம் ஆண்டு நினைவு நாள் பேரணி!

## மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிவிப்பு!



தஞ்சை, ஆக. 5-

வருகின்ற 07.08.2023 திங்கட்கிழமை அன்று காலை 8.00 மணியளவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தாராசுரம் ரவுண்டானாவில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலையிலிருந்து தாராசுரம் பைபாஸ் ரோடு கலைஞர் பொன்விழா நுழைவு வாயில் வரை கருப்பு சட்டை அணிந்து அமைதி பேரணியாகச் சென்று அங்குள்ள உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் தவறாது குறித்த நேரத்தில் கலந்து கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

(குறிப்பு : மாநகர, ஒன்றிய, பேரூர்க் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக தொண்டர்களை திரளாக அழைத்து வர மாநகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள் உரிய ஏற்பாடுகளை செய்வதுடன் அனைத்து பகுதிகளிலும் திருவுருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தவும் ஏற்பாடு செய்யவும்)

இவ்வாறு மாவட்டச் செயலாளர் கல்யாணசுந்தரம் எம்.பி. தெரிவித்துள்ளார்.

தி.மு.க மாணவர் அணி

# நகர, பகுதி, ஒன்றியம், பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களை நியமிப்பதற்கான விண்ணப்பம்!

## மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு !

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நகர, பகுதி, ஒன்றியம், பேரூர் அமைப்பாளர் துணை அமைப்பாளர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

நகர, பகுதி, ஒன்றியம், பேரூர் அமைப்பிற்கு ஒரு அமைப்பாளர், ஐந்து துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படுவர்.

துணை அமைப்பாளர்களில் ஒருவர் ஆதிதிராவிடர்/பழங்குடியின இனத்தைச் சேர்ந்தவராகவும் மற்றும் பெண் துணை அமைப்பாளர் ஒருவரும் இருப்பது அவசியம்.

ஒரு துணை அமைப்பாளர், கண்டிப்பாக தற்போது கல்லூரியில் பயிலக்கூடிய மாணவராக இருத்தல் அவசியம்.

இப்பொறுப்புகளில் உள்ள தற்போதைய நிர்வாகிகள், மீண்டும் அப்பொறுப்புகளுக்கு வர விரும்பினால், அவர்களும் விண்ணப்பிக்க வேண்டியது அவசியம்.

30 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டும் இப்பொறுப்புகளுக்கு விண்ணப்பிக்கவும்.

நியமிக்கபடவுள்ள நிர்வாகிகள் அனைவரும் கல்லூரி/டிப்ளமோ படிப்பை முடித்தவராகவோ அல்லது தற்போது கல்லூரியில் பயிலக்கூடியவராகவோ இருத்தல் அவசியம்.

முரசொலியில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தை நகல் எடுத்தோ, மாவட்டக் கழகத்திடமிருந்தோ அல்லது வலைதள முகவரியிலிருந்தோ பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பத்தில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் தெளிவாக, முழுமையாக நிரப்பி, பாஸ்போர்ட் அளவு கலர் புகைப்படம் ஒட்டி விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பத்துடன் கழக உறுப்பினர் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை / ஆதார் அட்டை, கல்விச் சான்றிதழின் நகல் இணைப்பது அவசியம்.

முழுமையாகப் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை மாவட்டக் கழகத்திலோ, மாவட்ட அமைப்பாளரிடமோ, தலைமைக் கழகத்திலோ ஆகஸ்ட் மாதம், 10ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 06.00 மணிக்குள் ஒப்படைக்க வேண்டும். தாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தை முன்னிட்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

நகர, பகுதி, ஒன்றிய, பேரூர் அமைப்புகளுக்கான அமைப்பாளர்துணை அமைப்பாளர்களுக்கு நேர்காணல், அந்தந்த மாவட்டத்திலேயே மாநில மாணவர் அணி நிர்வாகிகளால் நடத்தப்படும். நேர்காணல் நடைபெறும் நாள், நேரம், இடம் மாவட்டக் கழக செயலாளருடன் கலந்து பேசி பின்னர் தெரிவிக்கப்படும்.

ஒன்றிய கிளைகள், நகரபகுதிபேரூர் வார்டுகளில் மாணவர் அணி நிர்வாகிகளைத் தேர்வு செய்வது குறித்த அறிவிப்பு பிறகு வெளியிடப்படும்.

விண்ணப்பப் படிவம் பதிவிறக்கம் செய்ய: http://surl.li/jmwoy

மேலும் தொடர்புக்கு:
முகநூல் https://www.facebook.com/EzhilarasanCVMP
டுவிட்டர் https://twitter.com/EzhilarasanCvmp

"அண்ணா அறிவாலயம்,"
சென்னை18.
நாள்: 29-07-2023

**சி.வி.எம்.பி. எழிலரசன்,** எம்.எல்.ஏ.
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி



# தி.மு.க.மாணவர் அணி



நகர, பகுதி, ஒன்றிய, பேரூர்
அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள்
விண்ணப்ப படிவம்

கழக மாவட்டம் : ..............................................
சட்டமன்றத் தொகுதி : ..............................................
நகரம் / பகுதி ஒன்றியம் / பேரூர் : ..............................................
வட்டம் / கிளை / ஊராட்சி : ..............................................
பெயர் : ..............................................
தந்தை பெயர் : ..............................................
பிறந்த தேதி : .............................. வயது ..............................
கல்வித் தகுதி : ..............................................
கல்லூரி பயிலும் மாணவர் எனில் அதன் விவரம் : ..............................................
தொழில் : ..............................................
முகவரி : ..............................................
..............................................
கைபேசி எண் : .............................. வாட்ஸ்-அப் எண் ..............................
மின்னஞ்சல் (Email) : ..............................................
கழகத்தில் உறுப்பினரா : ஆம் / இல்லை சேர்ந்த ஆண்டு : ..............................
கழக உறுப்பினர் எண் : ..............................................

இப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள எனது விவரங்கள் அனைத்தும் உண்மை என உறுதியளிக்கின்றேன்.

நாள் : (கையொப்பம்)

குறிப்பு : 1) படிவத்தில் விவரங்களைத் தெளிவாகப் படிக்கும் விதமாக பூர்த்தி செய்ய வேண்டும்.
2) புகைப்படம், வாக்காளர் அடையாள அட்டை / ஆதார், கல்விச் சான்றிதழ், கழக உறுப்பினர் அட்டை கண்டிப்பாக இணைக்க வேண்டும்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் :

**சி.வி.எம்.பி.எழிலரசன்** B.E., B.L., MLA
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

(Advt)